3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் தொடர்பான பிரச்சினை

திரு. சோ. அழகர்சாமி : அடுத்த பிரச்சினை என்னவென்றால் நான் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றிக் கொடுத்திருந்தீர்கள். ஏற்கெனவே அதுபற்றிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் அது தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தால் அவைக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் உரையிலே பேசியபோது தெரிவித்த கருத்துக்களின் அடிப் படையில் அன்றையதினமே இந்த மன்றத்தில் பதில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு முறை தொழிற் சங்கத் தலைவர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. மேலும் அது தொடர வேண்டு மென்பதற்காக அந்தப் பேச்சுவார்த்தை ஒரு சுமுகமான முடிவை எட்ட வேண்டுமென்பதற்காக வருகின்ற 27 ஆம் தேதி அன்றும் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினை ஒரு சுமூகமான முடிவினை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால் இதற்குமேல் இந்தச் சந்தர்ப் பத்தில் விவரம் தெரிவிப்பது பொருத்தமாக இராது என்பதால் இதையே அவர்கள் விளக்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரம் மதுரை கோட்ஸ் நிறுவனத்தில் ஓய்வுபெற்ற ஊழியர்கள் தங்களுக்கு வழங்கவேண்டிய பணத்தை நிர்வாகம் வழங்கவில்லை ; போராட்டம் நடத்தியபோது 500-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித் திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை கவன ஈர்ப்புத் தீர்மான மாக மாற்றியிருக்கிறீர்கள். இன்றுடன் இந்தக் கூட்டத்தொடர்